## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.37/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 21 | நாள் | : | 23.01.2025 |
| பெயர் | : | செல்வமுருகன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd day of January 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறை பேராசிரியர் துறைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.09.2019 ம் தேதி பணியிலிருந்தபோது சிவகிரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் நிலைய கு.எண்.393/2019 வழக்கில் இறந்துபோன கவினா என்ற 2 வயது பெண்குழந்தையின் சடலத்தை சடலக்கூராய்வு செய்ய கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை முதல் நிலை காவலர் சேதுலட்சுமி என்பவர் மூலம் பெற்று அவர் அடையாளம் காட்டிய சடலத்தை மாலை 3.45 மணிக்கு சடலக்கூராய்வை துவக்கினேன். சடலத்தில் மரண விரைப்பு கை மற்றும் கால்களில்

காணப்பட்டது. மிதமான தேகமுடைய பெண் குழந்தையாகும். அதன் கை மற்றும் கால்விரல் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. சடலத்தில் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள்

1) 2x0.5 செ.மீ. அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் மேல் உதட்டின் உள்பகுதியில் காணப்பட்டது.

2) 2x0.2 செ.மீ. அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் கீழ் உதட்டின் உள்பகுதியில் காணப்பட்டது.

சடலத்தை உட்கூராய்வு செய்தபின்னர் இருதயம் நல்ல நிலையில் காணப்பட்டது. அதன் வெளிப்பகுதியில் ஊசிமுனை அளவிலான இரத்தக்கட்டுகள் காணப்பட்டது. நுரையிரல் நல்ல நிலையில் காணப்பட்டது. அதன் குறுக்குவெட்டுத் தோற்றம் நீர் கோர்த்து கன்றிய நிலையில் காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக இருந்தது. இரைப்பையில் 50 கிராம் அளவில் சிறிதளவு செரிமானம் அடைந்த உணவுப்பொருள் காணப்பட்டது. அதில் குறிப்பிடதக்க வாடை ஏதும் காணப்படவில்லை. இரைப்பையின் உட்புறச்சவ்வு கன்றிய நிலையில் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சீராக இருந்தது. அதன் குறுக்குவெட்டுத் தோற்றத்தை பார்த்தபோது கன்றிய நிலையில் காணப்பட்டது. சிறுகுடலில் 20 கிராம் அளவில் சிறிதளவு செரிமானம் அடைந்த உணவுப்பொருள் காணப்பட்டது. அதில் குறிப்பிடதக்க வாடை ஏதும் காணப்படவில்லை. அதன் உட்புறச்சவ்வு கன்றிய நிலையில் காணப்பட்டது. சிறுநீர்ப்பையில் 20 மில்லி அளவில்

சிறுநீர் காணப்பட்டது. கர்ப்பப்பை வயதுகேற்ப அளவில் காலியாக இருந்தது. மூளை சீராக காணப்பட்டது. அதன் குறுக்குவெட்டுத்தோற்றம் கன்றிய நிலையில் நீர்கோர்த்து காணப்பட்டது. உள்உறுப்புகள் சேகரிக்கப்ட்டு இரசாயண பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இருதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம், மற்றும் மூளை துண்டுகள் சேகரிக்கப்பட்டு நுண்ணோக்கி பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. உள்ளுறுப்புகளில் இரசாயண பரிசோதனை அறிக்கை வரப்பெற்றதை பார்வையிட்டதில் நச்சுப்பொருட்கள் ஏதும் இல்லை என தெரியவந்தது. நுண்ணோக்கி பரிசோதனை அறிக்கையில் நுரையீரல் பகுதி மட்டும் நீர் கோர்த்து கன்றிய நிலையில் இருந்ததாகவும் மற்றவை இயல்பாக இருந்ததாக தெரியவந்தது. எனவே அதனடிப்படையில் இறப்பு வாய் மற்றும் மூக்கு பகுதி அழுத்தப்பட்டு அதனால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக குழந்தை இறந்திருக்கக்கூடும் என்று கருத்துரை வழங்கினேன். எனக்கு வரப்பெற்ற வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.16 ஆகும். நான் வழங்கிய சான்று அ.சா.ஆ-17 ஆகும். நீதிமன்றத்தில் காணப்படும் குழந்தைக்கான படுக்கைபோன்ற போன்ற பொருளால் முகத்தை அழுத்தும்போது மூச்சு திணறல் ஏற்பட்டு மரணம் ஏற்பட வாய்புள்ளதா என்றால் அதற்கும் வாய்புள்ளது. புலனாய்வு அலுவலர் இதுகுறித்து என்னிடம் கருத்துரை கேட்டு நான் அதற்காக ஒரு கருத்துரை வழங்கியுள்ளேன். அது அ.சா.ஆ.18 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

அ.சா.ஆ.16 சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் என்றால் சரிதான். எங்கள் துறைக்கு தனியே வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அந்த கடிதத்தை நான் இன்று இந்நீதிமன்றத்தில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை அலுவலருக்கு சடலக்கூராய்வு செய்துதரும்படி கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் பற்றி எனக்கு தெரியாது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலும் சடலக்கூராய்வு செய்யப்படும் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக குழந்தையின் சடலம் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. சடலக்கூராய்வு விண்ணப்பதுடன் வழக்கின் சரித்திரம் இணைக்கப்பட்டிருந்தது. புலனாய்வு அலுவலர் வேண்டுகோள் கடிதம் கொடுத்தால் சடலக்கூராய்வு வீடியோவாக பதிவு செய்யப்படும். சடலக்கூராய்விற்கு முன்னர் சடலத்தில் காணப்பட்ட இரண்டு காயங்களை புகைப்படமாக எடுக்கவில்லை என்றால் சரிதான். கனமான பொருட்கள் குழந்தையின்மீது படும்போது நான் குறிப்பிட்ட இரண்டு காயங்கள் ஏற்படுமா என்றால் அதனுடன் இணைந்த வேறு காயங்களும் காணப்படும். நான் கூறுவது தவறு என்றும் அவ்வாறு ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. குழந்தையின் மூக்கில் காயங்கள் ஏதும் இல்லை. சடலக்கூராய்வு செய்யப்பட்ட நாளிலிருந்து 04.11.2019 க்கு முன்பு வரை அ.சா.ஆ.18 ல் கூறப்பட்ட சந்தேகம்

குறித்து புலனாய்வு அலுவலரால் எழுத்துப்பூர்வமான கேள்வி கேட்கப்படவில்லை என்றால் சரிதான். 01.11.2019 ம் தேதியும் புலனாய்வு அலுவலர் என்னிடம் அதுபோன்ற கேள்வியை எழுத்துமூலமாக கேட்கவில்லை. அ.சா.ஆ 18 ல் புலனாய்வு அலுவலர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் பற்றிய விவரங்கள் காணப்படவில்லை என்றால் சரிதான். கரிவலம்வந்தநல்லூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டதாக கூறப்படும் ஆவணங்களையும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை. முன்னதாக பரிசோதனை செய்த மருத்துவர்கள் எவரும் நான் பார்வையிட்டபோது குழந்தையின் உதட்டில் காயம் பற்றி குறிப்பிடாத நிலையில் நான் சடலக்கூராய்வில் குறிப்பிட்டுள்ளேன் என்றும் அது பின்னிட்டு சடலக்கூராய்விற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்டிருக்க கூடும் என்றால் சரியல்ல. இறப்பின் காரணம் பற்றி புலனாய்வு அலுவலர் முடிவு செய்ய இயலாத நிலையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய போதிய முகாந்திரம் இல்லை என்பதால் என்னுடைய அறிவுரையின்பேரில் புலனாய்வு அலுவலரிடமிருந்து வேண்டுகோள் பெற்று அதனடிப்படையில் நான் அ.சா.ஆ.18 ஐ கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழங்கிய கருத்துரை அடிப்படையற்றது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.01.23 17:46:07 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.37/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 20 | நாள் | : 23.01.2025 |
| பெயர் | : அன்னராஜ் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd day of January 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்தபோது கடந்த 09.09.2019 தேதி மதியம் 3.05 மணிக்கு பணியில் இருந்தபோது தென்மலை கோவிலூர் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த பரமசிவன் என்பவர் மகள் 2 வயதுடைய கவினா என்பவரை பரமசிவம் கொண்டுவந்திருந்தார். குழந்தையை பரிசோதித்தபோது சுயநினைவின்றி தொடுதிறன் உணரக்கூடிய நிலை இல்லாமல் காணப்பட்டார். இதயதுடிப்பு ஏதும் இல்லை. சுவாசமின்றி காணப்பட்டது. அவரது கண் வெளிச்சத்திற்கு பதிலளிக்க

இயலாத நிலையில் நிலைத்தபடி இருந்தது. அவர் இறந்த நிலையில் கொண்டு வரப்பட்டார் என்பதால் சவக்கிடங்கிற்கு அனுப்பிவைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.14 ஆகும். சவக்கிடங்கிற்கு அனுப்பிவைத்த Intimation அ.சா.ஆ.15 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

அ.சா.ஆ.14 ஐ நான்தான் எழுதினேன். இறந்தவர் எந்த வாகனத்தில் கொண்டுவரப்பட்டார் என்று அதில் குறிப்பிடப்படவில்லை 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் பொதுவாக குறிப்பிடப்படும் என்றால் சரிதான். அந்த குழந்தை எங்கிருந்து என்ன நிலையில் மருத்துவமனைக்கு என்ன காரணத்திற்காக கொண்டுவரப்பட்டார் என்ற விவரத்தை கூறவில்லை. பேச்சுமூச்சு இல்லை என்பதால் அழைத்துவந்ததாக கூறினார் அதை விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. காயத்தின் தன்மை என்று விபத்து பதிவேட்டு நகலில் உள்ள காலத்தில் வேறு விபரங்கள் எழுதப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலை அன்றைய தினமே காவல் துறைக்கு வழங்கப்பட்டுவிட்டது. விபத்து பதிவேட்டு நகலில் எந்த தேதியில் கையொப்பமிட்டேன் என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அன்றைய தினமே காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.01.23 17:08:27 +0530